Volume:18-Issue-02-February 2009 Annual Subscription-Rs200/- Single Copy Rs.20/-

TAMIL NADU SMALL AND TINY INDUSTRIES ASSOCIATION
50 YEARS Golden Jubilee
TANSTIA 1956-2006 SERVES SMALL INDUSTRIES

# Small Industry



## Tribute to a Great Son of India



ஆசியாவிலேயே முதன் முதலில் கிண்டியில் தொழிற்பேட்டையை தொடங்கி தொழிற்பேட்டையின் தந்தை என அழைக்கப்படும் முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமன் அவர்களின் மறைவிற்கு டான்ஸ்டியா ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

ஆர் வி. என்றால்
ஆர்வமூட்டு
அல்லது
ஆற்றுப்படுத்து என்று பொருள்!

தொழில்துறை சிறக்க
ஆர்வமூட்டி, ஆற்றுப்படுத்தி
வளர்ச்சி பாதைக்கு
வெளிச்சமிட்டவர் ஆர்.வி.!

ஆசிய கண்டத்திலேயே
முதன் முதலாக
தொழிற்பேட்டையை
சென்னை கிண்டியில் தொடங்கி
தமிழ்நாட்டிற்குப்
பெருமை சேர்த்தவர்!

சிறுதொழில் வளர்ந்தால்
சீர்பெறும் நாடென
தொழிற் பேட்டைகளைத்
தொடங்கிய தகைமையால்
தொழிற்பேட்டைகளின்
தந்தை என்ற
தொண்டறப் பட்டம்
சூடிய தலைவர்!

பட்டுக் கோட்டையில்
பாதச் சுவடுகளை
பாலச் சுவடுகளாய்
பதித்த ஆர்.வி.
இந்திய நாட்டின்
குடியரசுத் தலைவராய்
இமயமாய் உயர்ந்து
தமிழகப் பெருமையில்
தனித்துவம் சேர்த்தவர்!

ஆர்.வி. என்னும்
ஆற்றலாளர் புகழ்
ஊர்வலம் போகும்
உலகுள்ள வரையில்!

தமிழ்நாடு சிறு மற்றும்
குறுந்தொழில் சங்கம்
(டான்ஸ்டியா)